முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் – என் மீதும் பேரன்பு கொண்டு செயலாற்றியவர்!

பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்!

சேந்தமங்கலம் தொகுதி கழக எம்.எல்.ஏ., கு.பொன்னுசாமி மறைவுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 24 -

சேந்தமங்கலம் தொகுதியின் கழக சட்டமன்ற உறுப்பினர் கு. பொன்னுசாமி அவர்கள் மறைவெய்தியதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் "சேந்த மங்கலம் கு.பொன்னுசாமி - முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் என் மீதும் பேரன்பு கொண்டு செயலாற்றியவர்!" என்றும், "பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்!" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சேந்தமங்கலம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் கு.பொன்னுசாமி அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

சேந்தமங்கலம் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்று இரண்டு முறை அவர்களது பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் மக்கள் பணி ஆற்றிய அவரது மறைவு அத்தொகுதி மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரிழப்பாகும்.

கழகத்தின் மீது தீவிரப் பற்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் என் மீதும் பேரன்பும் கொண்டு செயலாற்றி வந்த அவர், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகக் கழகத்தை வளர்த்ததோடு, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர்.

அவரது மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் சேந்தமங்கலம் தொகுதி மக்கள், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், பொது வாழ்வில் அவருக்குத் துணை நின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பூர் தெற்கு மாவட்டம், ஐமீன் ஊத்துக்குளி பேரூராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமை திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் துவங்கி வைத்து பார்வையிட்டனர். இதில் பொள்ளாச்சி தெற்கு (வடக்கு) ஒன்றியச் செயலாளர் எஸ்.என்.காணியப்பன், ஐமீன் ஊத்துக்குளி பேரூராட்சி தலைவர் அகதூர்சாமி, துணைத் தலைவர் அபுதாகீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் சந்திரமோகன் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், அக். 24 -

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (25.10.2025 - சனிக்கிழமை) மாலை 3.15 மணி அளவில் பரமக்குடி. ஏ.பி.ஷா மகாலில் மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , மற்றும் வனத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர். எஸ்.இராஜகண்ணப்பன் , மாவட்டக் கழக பொருளாளர் செ.முருகேசன் எம்.எல்.ஏ., , தலைமை கழகத்தால் நியமிக்கப் பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்), மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1.பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழா கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகை.

2.துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு நலத்திட்டங்கள் வழங்கும் விழா. 3. வாக்காளர் சேர்க்கை, நீக்கல், திருத்தம் சிறப்பு முகாம். கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சாதி ஆணவப் படுகொலை தடுப்பு சிறப்புச் சட்டம்!

முதல்வர் அறிவித்த ஆணையத்தை ஆதித் தமிழர் பேரவை வரவேற்கிறது!

நிறுவனர் – தலைவர் அதியமான் அறிக்கை!

சென்னை, அக். 24 -

சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக தனிச் சட்டம் இயற்றுவதற்கு பரிந்துரை வழங்குவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் கே.என்.பாஷா தலைமையிலான ஆணையத்தை அமைத்திட தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளதை ஆதித்தமிழர் பேரவை வாழ்த்தி வரவேற்கிறது என அதன் நிறுவனர் - தலைவர் அதியமான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சாதி மத மறுப்பு திருமணத் தம்பதிகள் தொடர்ச்சியாக சாதி ஆணவக் கொலைகளுக்கு ஆளாவதும்.

சாதி வெறி தாக்குதலுக்கு ஆளாவதும் தொடர்ந்து வருகிறது.

சமூகத்தில் ஒருவருக்கொருவர் கலந்துவிடக் கூடாது என்று அவர் சாதிக்குள் அவரவர் உட்பிரிவுக்குள்தான் இரத்தக் கலப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இல்லையென்றால் சாதிப்புனிதம் கெட்டுவிடும் என்ற அளவுகோல் திணித்து வைக்கப்பட்டிருக்கிறது.

அறிவியலுக்கு ஒவ்வாத பிற்போக்கு தனங்களால் இந்தியச் சமூகத்தில் அகமணமுறை விளங்குவதால் சாதி மறுப்புத் திரும ணங்கள் கொடூரமான வன்முறைகளுக்கு இரையாகி வருகின்றது. குறிப்பாக சாதி கௌரவத்தால் பெற்ற பிள்ளை களையே படுகொலை செய்யும் அளவிற்கு சாதிய பெருமிதம் அதிகரித்திருக்கிறது.

மேலும் தீண்டாமை வன்கொடுமைகளால் பாதிக்கப்படும் சமூகங்களாக பட்டியல் சமூகம் இருந்தாலும் கூட ரத்தக்கலப்பை ஏற்காமல் இவர்களுக்குள்ளேயே கொலை செய்யும் அளவிற்கு வன்மமும் தாக்குதலும் பெருகியிருக்கிறது. உதாரணத்திற்கு கண்ணகி முருகேசன் தொடங்கி அழகேந்திரன் வரை பட்டியல் சாதி ஆணவக் கொலையால் பலியாகியிருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. அதே போல பிற்படுத்த ப்பட்ட மிகவும் பிற்படுத்தப் பட்ட சமூகங்களுக்குள்ளேயும் சாதி பொருளாதாரம் வேலைவாய்ப்பு பாலின வேறுபாடு போன்றவற்றையும் சுட்டிக்காட்டி ஆவணப் படுகொலைகளும் நடந்து கொண்டிருப்பது வேதனையளிக்கிறது.

சாதி ஆணவக் கொலைகள் தனி நபர்களால் அல்லது ஒரு குடும்பத்தினரால் மட்டும் நடத்தப்படுவதில்லை. கூடுதலாக சமூக நிர்பந்தம், சாதி ஆதிக்க சக்திகளின் அச்சுறுத்தால், கட்டப்பஞ்சாயத்து - சாதித்தூய்மை போன்ற கருத்தாக்கம் ஆகியனவும் இவற்றின் பின்புலமாக இருக்கின்றன.

ஆகவே ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்கள் மட்டும் போதாது தனிச் சட்டம் வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் போராடி இருக்கின்றன.

ஆகவே நமது அரசியலமைப்பு சட்டம் திரு மணத்திற்கான இணையை தெரிவு செய்து கொள்ளும் உரிமையை திருமண வயதை எட்டிய ஒவ்வொருவருக்கும் வழங்கியிருக்கிறது இதற்கு எதிரான படுகொலைகளையும் நிர்பந்த ங்களையும் வன்முறைகளையும் மற்றும் தாக்குதலையும் தண்டனைக்கு உள்ளாக்கும் விதமாகவும் சிறப்பு சட்டமாகவும் சாதி ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.அதியமான் கூறியுள்ளார்.

நாகை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் கலந்துரையாடல் கூட்டம் நாகப்பட்டினத்தில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட தேர்தல் பொறுப்பாளரும், கழக சட்ட திருத்தக் குழு தலைவருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி.பேசினார். உடன் நாகை மாவட்ட திமுக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், தொகுதி பார்வையாளர்கள் ஆர் அருள் செல்வம், இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராஜன். க.ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து – பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி

மாநில உரிமைகளுக்காகப் போராடும் 'திராவிட மாடல்' முதல்வரை குறை கூறுவதா?

எடப்பாடிக்கு – அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, அக். 24 -

மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்து - பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் முதல்வரை குறை கூறுவதா? என்று எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது :-

புதிய டி.ஜி.பி. நியமனம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் முன்னாள் டி.ஜி.பி. அவர்களின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்தும், இதுவரை புதிதாக டி.ஜி.பி. நியமிக்கப் படவில்லை என்றும், தங்களுக்கு ஏற்ற நபரைத் தேர்தல் நோக்கத்திற்காக நியமிக்க வேண்டும் என்பதற்கா கவே இவ்வாறு காலதாமதம் செய்யப்படுகின்றது என்றும் வழக்கம்போல் அடிப்படையில்லாமல் பேசியிருக்கிறார்.

மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருந்த காரணத்தால்தான், புதிய டி.ஜி.பி. நியமனத்திற்கான பட்டியல் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு (UPSC) உரிய காலத்தில், அனுப்பி வைக்க இயலவில்லை என்ற அடிப்

படை உண்மையைக் கூட அவர் தெரிந்து கொள்ள முற்பட வில்லை. வழக்கு முடிந்த பின்னர் எந்தவிதக் காலதாமதமும் இன்றி அந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது என்று ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருந்ததையும் அவர் புரிந்து கொள்ளவில்லை.

அதன்பிறகு டிஜிபி நியமனப் பட்டியல் தொடர்பாக ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய கூட்டத்தில், விதிகளுக்குப் புறம்பாக சில பெயர்கள் முன்மொழியப்பட்டது குறித்து, தமிழ்நாடு அரசு தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது. மாநில உரிமைகளை மதிக்கும் ஒரு அரசு. பழனிசாமி போல அமைதி காக்க முடியாது.

இருப்பினும், மாநில சட்டம் - ஒழுங்குக்குப் பொறுப்பான தமிழ்நாடு அரசின் கருத்துகளை ஏற்காமல், தாங்கள் விரும்பியவர்களையே முன்மொழிந்து ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பட்டியலை அனுப்பி வைத்தது. இந்தப் பட்டியல் தமிழ்நாடு அரசால் ஏற்கத்தக்கதாக இல்லாத நிலையில், அதற்கான காரணங்களை முழுமையாக விளக்கி, தலைமைச் செயலாளர் அவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார். அதற்கான பதில் இன்னும் பெறப்படாத நிலையில், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்" என்ற கதையாக மாநிலச் சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். தனது ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு மாநில உரிமையாக விட்டுக் கொடுத்து, பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பழனிச்சாமி அவர்களிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

தமிழ்நாடு அரசு தனக்கு வேண்டப்பட்ட நபரை புதிய டி.ஜி.பியாக அமர்த்த வேண்டும் என்பதல்ல இங்கே உள்ள பிரச்சினை. சட்டம் - ஒழுங்கு தொடர்பாக மாநில அரசின் கருத்துக்களைப் புறக்கணித்து தனக்கு வேண்டப்பட்ட நபர்களைத் தமிழ்நாட்டில் டி.ஜி.பி.ஆக அமர்த்துவதற்கு ஒன்றிய அரசு முயலும் அடாவடிதான் புதிய டிஜிபி நியமனத்தில் தமிழ்நாடு அரசு சந்திக்கும் பிரச்சினை. ஏற்கனவே இது போன்ற பல பிரச்சினைகளில், மாநில அரசின் உரிமைகளை திராவிட மாடல் அரசு நிலைநாட்டியதைப் போன்று டிஜிபி நியம னத்திலும் மாநில உரிமைகளை நிலைநாட்ட முழுமுயற்சிகளையும் முதலமைச்சர் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்கட்சித் தலைவர் ஏதேதோ சொல்லிப் புலம்புகிறார்.

தற்போது புதிய டி.ஜி.பி. நியமனத்தைக் குறை கூறும் பழனிசாமி, தாம் வணங்குவதாகக் கூறும் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலத்தில் எந்த சட்டப் பிரச்சினையும் இல்லாத போதே, எத்தனை மாதங்கள், எத்தனை ஆண்டுகள் டி.ஜி.பி. இல்லாமல் அரசை நடத்தினார் என்பதை விரல் விட்டு எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர மாநில உரிமைகளுக்காகப் போராடும் திராவிட மாடல் நாயகர் - முதலமைச்சர் அவர்களைக் குறை கூறுவதா?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முதல்வர் உத்தரவுப்படி – செம்பரம்பாக்கம் ஏரியில் நீர் படிப்படியாக திறப்பு!

சென்னையில் கன மழை பெய்தும் எந்த சுரங்கப்பாதையும் மூடப்படவில்லை!

கோட்டூர்புரத்தில் – நரிக் குறவர்களுக்கு உணவு வழங்கி – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, அக். 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் படிப்படியாகதிறந்து விடப்படுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் சென்னையில் பல்வேறு பகுதிகளில் 10 செமீ அளவிற்கு கனமழை பெய்தும் கூட எந்த சுரங்கப் பாதையும் மூடப்படவில்லை, போக்குவரத்தும் தடை செய்யப்படவில்லை என அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்தார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (22.10.2025) சென்னை கோட்டூர்புரம் ஜிப்சி காலனி நரிக்குறவர் குடியிருப்பில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மதிய உணவு வழங்கினார். பிறகு அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழையினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து சேவை துறைகளையும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கு உத்தரவிட்டு அந்தவகையில் தமிழ்நாட்டில் இருக்கின்ற சேவை துறைகள் அனைத்தும் மிக வேகமாக செயலாற்ற தொடங்கி இருக்கிறது. குறிப்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை வரவழைத்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் பெரிய அளவிலான கூட்டம் நடத்தி இது போன்ற மழைக்காலங்களில் மக்களிடையே தொடர்ந்து பணியாற்றிட வேண்டும் என்கின்ற வகையில் அறிவுறுத்தல் கூட்டம் நடைபெற்றது.

கடந்த 3 நாட்களாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் சென்னையின் பல்வேறு பகுதிகளில் எங்கேயெல்லாம் மழைநீர் தேங்கி இருந்தததோ அங்கெயெல்லாம் புதிய மழைநீர் வடிகால்கள் கட்டியதற்கு பிறகு எந்த அளவிற்கு பலன் இருக்கிறது என்பதை நேரிடையாக ஆய்வு செய்து வருகிறார்கள். கடந்த 24 மணி நேரத்தில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் சராசரியாக 10 செ.மீ மேல் மழை பெய்திருக்கிறது. செம்பரம்பாக்கம் பகுதியில் இன்று காலை கூட செம்பரம்பாக்கம் ஏரி முழு கொள்ளளவை மிக விரைவில் எட்டக் கூடும் என்ற நிலை இருந்துக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மழை பொழிந்து கொண்டிருக்கும் காரணத்தினாலும் தமிழ்நாடு முதலமைச்சர் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரி நீரை திறந்து விடும் பணியினை சரியாக கண்காணிக்க தொடங்கி இன்று காலை 100 மில்லியன் கன லிட்டர் அளவிற்கும் தற்போது 500 மில்லியன் கன லிட்டர் அளவிற்கும் உபரி நீர் திறந்து விடப்பட்டி ருக்கிறது. இப்படிப்படிப்படியாக மக்கள் நலனில் அக்கறைக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் மிகச் சிறப்பாக இன்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை இதற்கு முன்னாள் எல்லாம் 4 அல்லது 5 செ.மீ அளவிற்கு மழை பொழிவு இருந்தாலே வாரக் கணக்கில் பல்வேறு சாலைகளில் தண்ணீர் தேங்கி நிற்கும்.

சென்னையில் இருக்கின்ற சுரங்கப்பாதை பெரும்பகுதி போக்குவரத்திற்கு இடையூராக நீர் சூழ்ந்து காணப்படும், ஆனால் கடந்த 24 மணி நேரத்தில் சென்னையில் பல்வேறு பகுதிகளில் 10 செ.மீ அளவிற்கு மழைப் பொழிந்தும் கூட எந்த சுரங்கப் பாதையும் மூடப்படவில்லை. எந்த சுரங்கப் பாதையிலும் போக்குவரத்து தடைசெய்யப்படவில்லை. எந்த சாலையிலும் மழைநீர் தேக்கம் என்பது இல்லை. கடந்த காலங்களில் எந்தெந்த பகுதிகளில் மழைநீர் தேங்கி இருந்ததோ அப்பகுதிகளில் புதிய மழை நீர் வடிகால்வாய்கள் அமைத்தும், ஏற்கெனவே இருந்த மழைநீர் வடிகால் வாய்களை தூர்வாரியும் சென்னையின் பிரதான நீர் ஆதாரங்களை கொண்டிருக்கின்ற கூவம், ஓட்டேரி கால்வாய், கேப்டன் கல்வாய், மாம்பலம் கால்வாய், இராஜ்பவன் கால்வாய் போன்ற பல்வேறு கால்வாய்களில் மழைநீர் வேகமாக செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அடையார் ஆற்றின் முகத்துவாரத்தை நீர்வளத்து றையினர் தொடர்ந்து அதனை சுத்தப்படுத்திக் கொண்டிருப்பதால் இன்றைக்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்படும் உபரிநீரும் கடலில் சேர்கின்ற வகையில் பணிகள் நடைபெற்று முடிந்து எந்தவிதமான பிரச்சினைகள் இல்லாமல் சென்றுக் கொண்டிருக்கிறது.

கோட்டூர் ஜிப்சிகாலனி என்று சொல்லக்கூடிய நரிக்குறவர் குடியிருப்பு பகுதியில் கடந்த 2 நாட்களாக இப்பகுதி மக்கள் வெளியில் சென்று எந்தவிதமான வருமானமும் இன்றி இருந்துக் கொண்டிருந்த காரணத்தினால் இப்பகுதி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இப்பகுதி மக்களுக்கான உணவை தயாரித்து அனைத்து குடும்பங்களுக்கும் உணவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர் இரா. துரைராஜ், வட்டச் செயலாளர்கள் கு.மணி, கோட்டூர் சண்முகம் உள்ளிட்ட கழக முன்னணியினர், நிர்வாகி கள் உடனிருந்தனர்.